**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' – 2010–16 – கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு வீட்டின் மாதிரி வடிவமைப்பு (model type design) அங்கீகரித்து கட்டுமான அளவு விவரங்களுடன் புதிய மாதிரி வடிவமைப்பு (model type design with specification) மற்றும் உத்தேச மதிப்பீடு (Tentative estimate) – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 88 நாள்: 27.08.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.85, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 12.08.2010.

2) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் கடித எண்.16263/2010/ KVVT, நாள் 25.08.2010.

*****

**<u>ஆணை:</u>**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் காணப்படும் செயற்குறிப்பினை ஏற்று அரசாணை (நிலை) எண்.85, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.08.2010–க்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது

**<u>திருத்தம்</u>**

(i) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படவுள்ள வீடுகள் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பு இரண்டில் காணப்படும் மாதிரி வடிவமைப்பிற்கு பதிலாக இவ்வாணையின் இணைப்பு ஒன்றில் காணப்படும் கட்டுமான அளவு விவரங்களுடன் கூடிய மாதிரி வடிவமைப்பு (model type design with specification) போல் கட்டப்பட வேண்டும். கட்டப்படவுள்ள வீட்டின் பரப்பளவு சமையலறை உட்பட 19.24 ச.மீ (207 சதுர அடி), அதன் நீளம் 5.6 மீ (18' 4 1/2'') அகலம் 3.13 மீ (10' 3'') (சமையலறை தவிர்த்து) மற்றும் வீட்டின் மேல்தளம் வரை உயரம் 3.25 மீ (10' 8'') ஆகும்.

(ii) “கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்” கீழ் கட்டப்படவுள்ள வீடுகள் இவ்வாணையின் இணைப்பு இரண்டில் காணப்படும் உத்தேச மதிப்பீட்டை (Tentative estimate) பின்பற்றி கட்டப்பட வேண்டும்.

(iii) மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பு I, பத்தி 3 (ii) மற்றும் பத்தி 3(iv)–ல் காணப்படும் இனங்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.